## மிளகு

### 1.பொள்ளு வண்டு

**தண்டு மற்றும் காய்களில்**

- வண்டினப் புழு வளரும் நுனி, இளம் தளிர், இலைக்காம்பு, பூச்சரம் மற்றும் காய்களை துளையிட்டு சாப்பிடும்.
- இளம் தண்டுகளில் துளையிடுவதால் தண்டுப்பகுதி காய்ந்துவிடுகிறது.
- வண்டினப் புழுக்களால் தாக்கப்பட்ட பூச்சரம் கருப்பாக மாறிப் பிறகு அழுகி பூச்சரம் உதிரிவிடும்.
- வண்டினப் புழுக்கள் காய்களை துளையிட்டு சென்று உள்ளிருக்கும் திசுக்களைச் சாப்பிடும்.
- காய்ந்த காய்களில் சிறுதுளைகள் காணப்படும்.
- புழுக்கள் காய்களை துளையிடுவதால் காய்கள் கருகிக் காய்ந்து விடுகின்றன.
- தாக்கப்பட்ட காய்கள் பொட்டாக அல்லது பொக்கு இருக்கும் அழுத்தியவுடன் உடைந்து விடும்.
- பொட்டாக உள்ளக் காய்களை **பொள்ளுக்** காய்கள் என்பர்.

**இலைப்பகுதியில்**

- இளம் தளிர்களை வண்டுகள் சாப்பிடும்.
- இலையின் மேற்பரப்பில் ஒழுங்கற்ற துளைகள் இருக்கும்.

- வண்டுகள் முதிர்ந்த இலையின் மேற்பரப்பில் இருக்கும் திசுக்களை சுரண்டி சாப்பிடும்.

**பூச்சியின் விபரம்**

**முட்டை:** பழுப்பு கலந்த மஞ்சள் நிறத்தில் இருக்கும் தாய் வண்டுகள் வளரும் மொட்டு, இலை, இலைக்காம்பு, கதிர் மற்றும் இளம் காய்களில் துளையிட்டுத் தனித்தனியே முட்டையிடும்.

**வண்டினப்புழு** : இளம் மஞ்சளாக இருக்கும்

**கூட்டுப்புழு** : கூட்டுப்புழு மண்கூட்டில் இருக்கும்.

**வண்டு**: வண்டு நீலம் கலந்த மஞ்சள் நிறத்தில் பளபளப்பாக இருக்கும். பின்னங்கால்கள் சற்றுப் பெரியதாக இருக்கும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- தோட்டத்தின் நிழல் உண்டாவதை ஒழுங்குப்படுத்துவதன் மூலம் பூச்சிகளின் எண்ணிக்கைக் குறைக்கலாம்.
- கொடிகளின் அடிப்பகுதியில் இருக்கும் மண்ணை உழுது லிண்டேன் àளை மண்ணில் கலக்கவும்.
- எண்டோசல்ஃபான் அல்லது குவினால்ஃபாஸ் 0.05 சதம் கரைசலை ஜீலை மற்றும் அக்டோபரில் பயிரில் தெளிக்கவும் மற்றும் நீம் கோல்டு 0.06 சதவிகிதம் (வேம்பு வகைச் சார்ந்த பூச்சிக்கொல்லியை ஆகஸ்டு, செப்டம்பர்ல் தெளிக்கவும்)

**2.மேல் தண்டுத் துளைப்பான்: *லாஸபயிரிஸியா ஹெமிடாக்ஸா***

**சேதத்தின் அறிகுறிகள்**

- புழுக்கள் இளம் நுண் குருத்துக்களில் துளையிட்டு உள்ளே சென்று தண்டின் உள்ளிருக்கும் திசுக்களை சாப்பிடுவதால் அவைக் கருகி, அழுகி விடும்.
- நீர்த்தண்டுகள் அதிகமுள்ள மாதங்களான ஜீலை முதல் அக்டோபர் வரை இப்பூச்சியின் தாக்கம் அதிகமாக இருக்கும்.

**பூச்சியின் விபரம்**

புழு :

- சாம்பல் கலந்த பச்சை நிறத்தில் இருக்கும் கூட்டுப்புழு தண்டுகளின் துளைகளில் இருக்கும்.

**பூச்சி**: சிறிய அந்துப்பூச்சி

- அந்துப்பூச்சியின் முன் இறக்கைன் முன் பாதி கருப்பாகவும் பின் பாதி சிவப்பாகவும் இருக்கும்.
- பின் இறக்கை சாம்பல் நிறத்தில் இருக்கும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- இளம் துளிர்களின் மீது எண்டோசல்ஃபான் அல்லது குவினால்பாஸ் 0.05 சதவிகிதம் தெளிக்கவும். பூச்சிகளின் தாக்கத்தைக் குறைக்க ஒரு மாத இடைவெளியில் (ஜீலை, அக்டோபர்) மீண்டும் பூச்சிக்கொல்லி தெளிக்கவும்.

**3.இலைக்கழலைபேன்**: ***லியோதிரிப்ஸ் கார்னி***

**சேதத்தின் அறிகுறிகள்**

- இலையின் அடிப்பாகம் உட்புறமாக சுருண்டு விடுவதால் இலையின் ஓரங்கள் தடித்து விடும் அல்லது கொப்பளங்கள் உருவாகும்.
- தாக்கப்பட்ட இலைகள் சுருங்கி, உருக்குலைந்து இருக்கும்.
- அதிகமான தாக்கத்திற்கு உள்ளான செடிகள் வளர்ச்சிக் குன்றி கதிர்கள் உருவாவது தடைப்படும்.

**பூச்சியின் விபரம்**

**முட்டை**: இலைக்கொப்பளங்களில் தனித்தனியே இடும்.

**இளம் குஞ்சு**: வெண்மையானது

**பூச்சி**: இழைப்பேன் கருப்பாக இருக்கும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- டைமீதோயேட் 0.05 சதவிகிதம் இளம் தளிர்கள் உருவாகும் நேரங்களில் இளங்கொடிகளின் மீது தெளிக்கவும்.

**4.செதில் பூச்சிகள்**

**மிளகு தசை செதில் பூச்சி** : ***லெபிடோசேபஸ் பைப்பரிஸ்***

**தென்னை செதில் பூச்சி**: ***ஏஸ்பிடியோடஸ் டெஸ்ட்ரக்டார்***.

**சேதத்தின் அறிகுறிகள்**

- மிளகுக் கொடியின் இலைக்காம்பு, இலை மற்றும் தண்டுப் பகுதிகளின் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்.
- தாக்கப்பட்ட பகுதி மஞ்சளாக மாறிவிடும். மேலும் வாடிவிடும்.
- தாக்கப்பட்ட பகுதிகள் காய்ந்துவிடும்.

**பூச்சியின் விபரம்**

***லெபிடோசோபஸ் பைப்பரிஸ்:*** சிறிய கருநிறப் படகு போன்றவை.

***ஏஸ்பிடியோடஸ் டெஸ்ட்ரக்டார்:*** மிகச்சிறிய இளம் மஞ்சள் நிறம் கொண்டது.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- மிளகுச் செடியின் தாக்கப்பட்ட பகுதிகளைக் களைந்து நீக்கவும்.
- டைமிதோயேட் 0.1 சதவிகிதம் கரைசலை தெளிக்கவும் இரண்டாவது முறையாக 21 நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்கவும்.

**5.வெள்ளை வால் மாவுப்பூச்சி: *பொரீச்யா விர்கேட்டா***

**சேதத்தின் அறிகுறிகள்**

- நுனித் தண்டு, இலைகள் மற்றும் காய்கள் பகுதியில் மாவுப்பூச்சி கூட்டமாக இருந்து சாற்றை உறிஞ்சும்.
- செடிகள் மஞ்சளாக மாறி பிறகு காய்ந்துவிடும்.
- காய்கள் உதிர்ந்துவிடும்.

**பூச்சியின் விபரம்**

- தாய்ப்பூச்சி இறகற்றது மேலும் வயிற்றுப் பகுதியின் கடைசியில் வெண்ணிற மெழுகு போன்ற இழை இருக்கும்.
- உடல் முழுவதும் மெழுகுப் போன்ற மாவுப் பூச்சி இருக்கும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- தாக்கப்பட்ட பகுதிகளை களைந்து எடுத்து அழிக்கவும்.

- டைமீதோயேட் 2 மிலி/ லிட்டர் அல்லது மீதைல் ஃபாரத்தியான் 1 மிலி / லிட்டர் தெளிக்கவும்.